

ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராக நேற்று முன்தினம் (28.11.2024) பதவியேற்றுக் கொண்ட ஹேமந்த் சோரன் ராஞ்சியில் நடைபெற்ற பதவியேற்பு விழா நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பாக கலந்து கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து மற்றும் நினைவுப் பரிசினை வழங்கினார்.



ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராக ராஞ்சியில் நேற்று முன்தினம் (28.11.2024) பதவியேற்றுக் கொண்ட ஹேமந்த் சோரனின் பதவியேற்பு விழா நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.

## ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி மகத்தான வெற்றி!

# ஹேமந்த் சோரன் முதல்வராக பதவியேற்றார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று வாழ்த்து!

**ராஞ்சி, நவ.30-**

**ஜார்கண்ட் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் 'இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெற்றதையடுத்து,' ஜார்கண்ட் முத்தி மோர்ச்சா தலைவர் ஹேமந்த் சோரன் நேற்று முன்தினம் (28.11.2024) மீண்டும் அம்மாநில முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு அம்மாநில ஆளுநர் சந்தோஷ் கங்குவார் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பரிமாணமும் செய்து வைத்தார்.**

இந்தப் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வரும், தி.மு.கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், தமிழ்நாடு அரசின் சார்பிலும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 'இந்தியா கூட்டணி' - மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 56 தொகுதிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்தது. பா.ஜ.க. கூட்டணி தோல்வியினைத் தழுவியது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து ஹேமந்த் சோரன் ஆட்சி அமைக்க, ஆளுநரைச் சந்தித்து உரிமை கோரியதுடன், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுக் கடிதங்களையும் அப்போது வழங்கினார்.

இதையடுத்து ஹேமந்த் சோரனை ஆட்சி அமைக்க அம்மாநில ஆளுநர் அழைப்பு விடுத்திருந்தார். ஆளுநரின் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் (28.11.2024) மாலை 4 மணியளவில் ராஞ்சியில் உள்ள மோரோபதி மைதானத்தில் பதவி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

அம்மாநில ஆளுநர் சந்தோஷ் கங்குவார் புதிய முதலமைச்சராக ஹேமந்த் சோரனுக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். ஹேமந்த் சோரன் முதலமைச்சராகப் பதவி ஏற்பது இது நான்காவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டப் பேரவையில் புதிய அரசு வாக்கெடுப்பில் தனது பெரும்பான்மையை நிரூபித்த பிறகு அமைச்சரவையில் எவ்வளவு அமைச்சர்கள் என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

இந்த பதவி ஏற்பு நிகழ்ச்சியில் 'இந்தியா கூட்டணி' கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, அகிலேஷ் யாதவ், சரத்பவார், முதலமைச்சர்கள் மம்தா பானர்ஜி, கொன்ராட் சர்மா, பகவந்த்மான் மற்றும் கர்நாடக துணை முதல்வர் சிவகுமார், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பல்வேறு தலைவர்கள் பங்கேற்று முதலமைச்சர் ஹேமந்த் சோரனுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, வாழ்த்துத் தெரிவித்து பாராட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் பற்றிய புத்தகம் ஒன்றை வழங்கி சிறப்பித்தார்.

இதையடுத்து ஜார்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சர் ஹேமந்த் சோரனின் பதவியேற்பு விழாவில் பங்கேற்றது குறித்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பில், ஜார்கண்ட் மாநிலத்தின் 14-ஆவது முதலமைச்சராக ஹேமந்த் சோரன் அவர்கள் பதவியேற்ற சிறப்புக்குரிய நிகழ்வில் ராஞ்சியில் 28.11.2024 அன்று பங்கேற்றோம்.**

**முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் ஹேமந்த் சோரனுக்கும் அவருடைய அமைச்சரவைக்கும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்ந்தோம்.**

**ஹேமந்த் சோரன் அவர்களுடைய தலைமையிலான ஜே.எம்.எம் அரசு, ஜார்க்கண்ட் மாநிலத்தின் அனைத்து துறை வளர்ச்சியையும் - அம்மாநில மக்களின் அடுத்தகட்ட முன்னேற்றத்தையும் உறுதி செய்யும் என்பதை உளப்பூர்வமாக நம்புகிறோம்.**

**தமிழ்நாடு மற்றும் ஜார்கண்ட் இடையேயான உறவு வருகின்ற நாட்களில் மேலும் வலுப்படும் என்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.




ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராக நேற்று முன்தினம் (28.11.2024) பதவியேற்றுக் கொண்ட ஹேமந்த் சோரனுக்கு ராஞ்சியில் நடைபெற்ற பதவியேற்பு விழா நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பாக கலந்து கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறித்த 'KARUNANIDHI A LIFE' என்ற புத்தகத்தை வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார்.

---

## தமிழ்நாட்டின் உரிமைகள் - நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்களின் குரல்!

## சரமாரி கேள்வி!

**சென்னை, நவ.30-**

**தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்கள் சரமாரி கேள்வி எழுப்பினர்.**

இதன் விவரம் வருமாறு:

**1.நிலத்தடி நீர் மாசு தீர்வு என்ன?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி**

நாடு முழுவதும் நிலத்தடி நீரில் காணப்படும் ஆர்சனிக் மற்றும் ஃப்ளூரைடு மாசுபாட்டை தீவிர பிரச்சினையாக எடுத்துக் கொண்டு ஒன்றிய அரசு தீர்வுகாண நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் மக்களவையில் திமுக நாடளுமன்ற உறுப்பினர் திருமிகு. கனிமொழி கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

நிலத்தடி நீர் மாசுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிரந்தர தீர்வு காணும் வரை உடனடியாக ஒன்றிய அரசு தூய்மையான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**2.விமானக் கட்டணம் தொடர்ந்து அதிகரிப்பு**

**தயாநிதி மாறன் குற்றச்சாட்டு**

கடந்த ஆண்டில் விமானப் பயணச்சீட்டு விலை 40% அதிகரித்து இருப்பது குறித்து ஒன்றிய அரசிடம் திமுக எம்.பி. திரு. தயாநிதி மாறன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். குறிப்பாக அதிக தேவை உள்ள காலங்களில், விமான கட்டணத்திற்கு ஒன்றிய அரசு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். இது தொடர்பாக விமான போக்குவரத்து நிறுவனங்களுடன் ஆலோசனைகள் நடத்தவேண்டும் என்றும் தன்னிச்சையாக விலை நிர்ணயம் செய்வதை தடுக்க வெளிப்படைத்தன்மைமுறை அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் நியாயமான போட்டியை ஊக்குவிப்பதற்காகவும், விலையை குறைப்பதற்காகவும் பொதுத்துறை நிறுவனங்களை மீண்டும் அறிமுகப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

**3.கிளாம்பாக்கத்திற்கு மெட்ரோ இரயில் எப்போது வரும்?**

**பி. வில்சன் கேள்வி**

மெட்ரோ இரயில் திட்டங்கள் தொடர்பாக மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி. வில்சன் அவர்கள் கீழ்காணும் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

சென்னை விமான நிலையம் மற்றும் கிளாம்பாக்கத்தை இணைக்கும் மெட்ரோ வழித்தடத்தின் தற்போதைய நிலை மற்றும் அவ்வழித்தடம் பயன்பாட்டுக்கு வரும் காலம் ஆகிய விவரங்கள் தெரிவிக்க வேண்டும். அதேபோல் கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களின் தற்போதைய நிலை என்ன என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து தமிழ்நாடு மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மட்டும் மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பட்ஜெட்டின் விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புற மற்றும் கிராமப்புற) திட்டங்களுக்கு பிரதமரின் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நகர்ப்புறங்களில் ஒன்றிய அரசு ஒரு வீட்டுமனைக்கு ரூ. 1,50,000 மற்றும் கிராமப்புறங்களில் ரூ. 72,000 மட்டுமே வழங்குகிறது. ஆனால் மாநில அரசு நகர்ப்புறங்களில் ரூ. 12,14,000 மற்றும் கிராமப்புறங்களில் ரூ. 1,68,000 வழங்குகிறது. ஆகவே ஒன்றிய அரசு தனது பங்கை அதிகரிக்க வேண்டும் என்ற மாநிலங்களின் கோரிக்கையின் மீது ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவின் விவரங்களை தெரியப்படுத்த வேண்டும்.

**4.தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை திட்டங்களின் நிலை என்ன? –**

**அ. மணி கேள்வி**

தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் நிலை, அவை முடிவடைய எதிர்பார்க்கப்படும் காலக்கெடு, தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி மற்றும் நடப்பு நிதியாண்டில் இது வரை செலவிடப்பட்ட தொகை மற்றும் தமிழ்நாட்டின் சாலைப் போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்கள் குறித்த விவரங்களை வெளியிடுமாறு ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரியிடம் மக்களவையில் திமுக எம்.பி. திரு. அ. மணி கேள்வி எழுப்பினார்.

**5.கிராமப்புற வேலைவாய்ப்பை அதிகரிக்க செய்க! – வலியுறுத்தல்.**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**

நாட்டில் பெண்கள் மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்க ஒன்றிய அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று திமுக எம்.பி. திரு. ராஜேஷ்குமார் மாநிலங்களவையில் வலியுறுத்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

தற்காலிக பணியாளர்கள், தினசரி ஊதியம் பெறுவோர் உட்பட முறைசாரா துறை தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு திட்டங்களை உருவாக்கி அவற்றை சீரிய முறையில் நடைமுறைபடுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கிராமப்புறங்களில் போதியளவு உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் வேலை நிமித்தமாக இடம்பெயர்வதை குறைக்கமுடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

**6. செயல்பாட்டில் உள்ள அணுமின் திட்டங்கள் எத்தனை? – கேள்வி!**

**கனிமொழி என்.வி.என். சோமு**

தற்போது நாட்டில் செயல்பாட்டில் உள்ள அணு மின் திட்டங்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளி விவரங்களை ஒன்றிய அரசு வெளியிடவேண்டும் என்று அத்துறையில் அமைச்சரான பிரதமர் நரேந்திர மோடியிடம் திமுக எம்.பி. டாக்டர். கனிமொழி என்.வி.என் சோமு கேட்டுள்ளார். செயல்படும் திட்டங்களில் இருந்து செய்யப்படும் மின் உற்பத்தியின் அளவு அதற்கான செலவு மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் அவை ஈட்டிய வருமானம் ஆகியவற்றை வெளியிடுமாறும் தனது அறிக்கையில் கோரியுள்ளார்.

இவ்வாறு கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

---



புதுடெல்லியில் நேற்று, ஒன்றிய கனரகத் தொழிற்சாலைகள் துறை அமைச்சர் குமாரசாமியை, நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா சந்தித்து உரையாடினார். அப்போது திருச்சி சிவா விடுத்த கோரிக்கையை ஒன்றிய அமைச்சர் ஏற்று, "சேலம் உருக்காலை புனரமைக்கப்படும்" என உறுதியளித்தார்.

# குடியாத்தம் நகரில் மாபெரும் கழகப் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

வேலூர், நவ. 30 -

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் திமுக பொதுக்கூட்டம் இன்று நடக்கிறது.

கூட்டத்திற்கு நகர மன்ற தலைவரும் நகர கழக செயலாளருமான எஸ். சௌந்தரராஜன் தலைமை தாங்குகிறார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அர்ச்சனா நவீன் சங்கர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

நகர கழக அவைத் தலைவர் நெடுஞ்செழியன் , நகர துணை செயலாளர்கள் ஜம்புலிங்கம், மனோஜ், வசந்தா, மாவட்ட பிரதிநிதி கவிஞர் பாரி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,

மாவட்ட துணை செயலாளர் ஜி.எஸ்.அரசு, குடியாத்தம் ஒன்றிய குழு தலைவர் என்.இ.சத்யானந்தம், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, நத்தம் வீ.பிரதீஷ் ,அன்பரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.